1987 மார்ச் 28]

சொல்லக்கூடிய பிரையாரிட்டி செக்டாரில் அமையாத காரணத்தால் மத்திய அரசிடமிருந்து வருகிற நிதி மிக மிக சொற்பமாக இருப்பதால் மாநில அரசே தன்னுடைய நிதி ஆதாரங்களிலிருந்து அதைச் செய்ய வேண்டிய நிலையில் இருக்கிறது. நிதிநிலைமைக்கு ஏற்ப அவ்வப்போது இவைகளைச் செய்ய வேண்டியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி அவர்கள் கூறியது போல் இடிந்த நிலையில் இருக்கிற கட்டிடங்களுக்குத்தான் முன் உரிமை கொடுத்து, இருக்கிற நிதிக்கு ஏற்ப நாம் பணிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.

திரு. எச். ஜி. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, பெண்ணாகரத்தில் ஒரு மாஜிஸ்ட்டிரேட் கோர்ட் இருக்கிறது. அந்த கோர்ட் துவக்கப்பட்டு சுமார் 5 வருடம் ஆகிறது. அந்த கோர்ட் பழைய இடிந்த கட்டிடத்தில் நடைபெற்றுக் கொண்டு வருகிறது. அதற்குத் தனியாக கட்டிடம் கட்டித் தரும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, நிதிநிலைமைக்கு ஏற்ப அரசு நடவடிக்கை எடுக்கும்.

நீலகிரி மாவட்டம், கூனூர் வட்டம், மஞ்சக்கொம்பை பஞ்சாயத்து நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக உயர்த்துதல்.

223—(* வினா எண் 10350) திரு. கே. உச்சி: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கூனூர் வட்டம், மஞ்சக் கொம்பை பகுதியில் உள்ள பஞ்சாயத்து நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்ற வேண்டி கோரிக்கை மனு ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) 1986-87 கல்வி ஆண்டில் நீலகிரி மாவட்டம் மஞ்சக்கொம்பை என்னுமிடத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியை அரசு உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தி ஆணைகள் வெளியிடப்பட்டுவிட்டன.

திரு. கே. உச்சி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினாவிற்கு விடை வருவதற்கு முன்னரே வெகு விரைவில் கூனூர் வட்டம் மஞ்சக்கொம்பை பகுதியில் இருந்த நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்றியதற்காக புரட்சித் தலைவர் அவர்களுக்கும், கல்வி அமைச்சர் அவர்களுக்கும் என் தொகுதி மக்கள் சார்பாக நன்றி தெரிவித்துக் கொண்டு, அதே நேரத்தில் என் தொகுதியான நெலாக்கோட்டை ஸ்ரீமதுரை, தேவாலா கையுண்ணி ஆகிய பகுதிகளில் உள்ள நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக ஆக்க அரசு முன்வருமா என்பதையும், பிதிர்காடு என்ற இடத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளியை பிளஸ் 2 பள்ளியாக ஆக்குவதற்கு அரசு முன்வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-40)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, இவைகுறித்து அரசுக்கு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களிடமிருந்து பரிந்துரை வரப் பெற்றிருக்கிறது. நீலகிரி மாவட்டம் மலைசூழ் பகுதியாக இருப்பதால் நெடுந்தொலைவு குழந்தைகள் நடந்து செல்கிற இன்னல் இடர்ப்பாடு இருக்கிற காரணத்தால் இதற்கு முன்னுரிமை கொடுத்து அரசு நடவடிக்கையெடுக்கும்.

திரு. கே. உச்சி: தலைவர் அவர்களே, மீண்டும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நீலகிரி மாவட்டம் மலைப்பகுதி என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். சமவெளிப் பகுதியில் இருக்கிற பள்ளிகளையும், பணியாற்றுகின்ற ஆசிரியர்களையும் கண்காணிக்கும் அளவிற்கு மலைப்பகுதியில் கண்காணிக்க முடியாது. அங்கு மாவட்ட கல்வி அதிகாரி ஒருவர் தான் இருக்கிறார். குறைந்தது நான்கு கல்வி அதிகாரிகளாவது இருந்தால்தான் அந்த மாவட்டத்தில் உள்ள பள்ளிகளை முழுமையாகக் கண்காணிக்க முடியும். ஆகவே முதலில் இருவரையாவது நியமிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, இரண்டு மாவட்ட கல்வி அதிகாரிகள் நியமிக்க வேண்டுமென்ற செயற்குறிப்பு அரசுக்கு வந்திருக்கிறது. அரசு அதைப் பரிசீலித்து வருகிறது.

1987 மார்ச் 28]

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் : தலைவர் அவர்களே, அரசாங்க கொள்கையின்படி ஒரு உயர்நிலைப் பள்ளியை ஏற்படுத்த வேண்டுமென்றால் அரசாங்கத்திற்கு கல்வி டெபாசிட்டாக 25 ஆயிரம் ரூபாய் கட்ட வேண்டும். ஐந்து ஏக்கர் நிலம் கொடுக்க வேண்டும். அதோடு போதுமான மாணவர்கள் ஸ்ட்ரெங்த் இருக்க வேண்டும். இவைகள் இருந்தால் உயர்நிலைப் பள்ளி அமைக்க அனுமதி வழங்கலாம் என்று அரசாங்கக் கொள்கை இருக்கிறது. என்னுடைய தொகுதியில் தொங்கனூர் என்ற இடத்தில் நான்கு ஆண்டுகளுக்கு முன்பு ஐந்து ஏக்கர் நிலம் வழங்கி, 25 ஆயிரம் ரூபாய் பணமும் கட்டி, போதுமான மாணவர்கள் இருக்கிறார்கள் என்று இலாக்காபூர்வமாக அறிக்கை அனுப்பியும் இன்னும் அதற்கு அனுமதி வழங்கப்படாமல் இருக்கிறது. அந்த உயர் நிலைப் பள்ளிக்கு அனுமதி வழங்க அரசு நடவடிக்கையெடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்துவதற்கு நகரங்களில் மட்டுமின்றி கிராமப்புறங்களிலும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று அரசு முடிவெடுத்திருக்கிறது. நெடுந்தூரம் பல கல் தொலைவிற்கு மாணவர்கள் நடந்து செல்ல வேண்டிய நிலை இருக்கிறதால் கிராமப்புற மாணவர்கள் சுமையைப் போக்குவதற்கு கிராமப்புறங்களில் அதிகப்படியான நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும் உயர் நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் உருவாக்குவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அதுகுறித்து தக்க நடவடிக்கையெடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையும் கவனிக்கப்படும்.